UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தமிழரின் போர் அறம்

**முதுமுனைவர் ந. ஞானமணி**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
செயின்ட் ஜோசப் கல்லூரி கலை & அறிவியல்
**முனைவர் பெ. குமாரவேல்,** இணைப்பேராசிரியர், உடற்கல்வியியல் துறை, தமிழ்நாடு உடற்கல்வி & விளையாட்டுப் பல்கலைக்கழகம்
**பா. செல்வநேசன்,** உடற்கல்வி இயக்குநர்
செயின்ட் ஜோசப் கல்லூரி கலை & அறிவியல்

**ஆய்வு நோக்கம்**

பண்டைத்தமிழர்கள் ஒவ்வோர் இயல்பினையும் சிறப்பாகப் போற்றியுள்ளனர். அகம், புறம், நீதி, பக்தி என அந்தந்தக் கால நிலைகளில் சிறப்பு பெற்றதை தம் இலக்கியங்களின் வழி சிறப்புற பதிவு செய்துள்ளனர். அவ்வகையில் பண்டைத்தமிழர்கள் போரினை அறத்தொடு நின்று போர் மரபினை எவ்வாறு மேற்கொண்டனர் என்பதை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது. சங்க காலத்தில் வீரம் முதன்மையாகப் போற்றப்பட்டுள்ளது. வீரமிக்கவர்களே சிறப்புக்குரியவர்களாக கருதப்பட்டனர்.

**"பழந்தமிழரின் கடமைகளை**
**"ஈன்றுபுறந்த லென்றலைக் கடனே**
**சான்றோ னாக்குத தந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே**
**ஒளிறுவா ளருஞ்சம் மருக்கிக்**
**களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"[1]**

எனப் "புறநானூறு புகழ்கிறது. இப்பாடல் குறிப்பிடும் அனைவரின் கடமைகளும் போரோடு தொடர்புடையவனாக இருப்பது கருதற்குரியது. இப்பாடலில் "சான்றோனாக்குதல் என்ற தொடருக்கு "வீரனாக்குதல்" என்று பொருள் கொள்வார் "உ.வே.சாமிநாதையர்"[2]

**போர் வரையறை**

உலகச் சமுதாயங்கள் அனைத்திலும் போரே முதன்மை பெற்றிருந்தது. தொல்காப்பியர் காலச் சமுதாயம் அதற்கு விலக்கன்று. போர்வயிற் பிரிவும் மறக்காதலனைத் தடுப்பது போல, இலக்கியச் சான்றோ, இலக்கணக் குறிப்போ ஒன்று கூட இல்லாமை குறிப்பிடத் தக்கது. தொல்காப்பியப் புறத்திணை, அகத்திணையினும் தலைமை உடையது. அகமோ, புறமோ எனில், புறமே முதல் என்பது "அற்றைநாட் கருத்து எனப் போர்த்திணையாகிய புறத்திணையைப் பற்றிக் கருத்துரைக்கிறார் க.ப.அறவாணன். பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் போர்ப்பண்பு மிகுந்திருந்ததைச் சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன. போரிடுவதற் கென்றே மறவர் குடிகள் இருந்தன. போரைத் தொழிலாகக் கொண்ட மறவர்கள் மட்டுமே போரில் ஈடுபட்டனர். மற்ற தொழில்களில் இம் மறவர்கள் ஈடுபடவில்லை என்பார். "வி.ஏ.சுமித்"[3]

சங்க காலத்தில் எண்ணற்ற போர்கள் நடை பெற்றுள்ளன. போர் இருந்தாலும் இல்லா விட்டாலும் மக்களுடைய வாழ்வு பாதிக்கப் படாமல் இருந்தது என்பார் வி.ஆர்.இராமச் சந்திர தீட்சிதர் "[4] இக்கருத்தை முற்றிலும் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. போரினால் நாடுகள் அழிந்ததையும், மக்கள் சொல்ல முடியாத துன்பமுற்றதையும் பல புலவர்கள் பாடியுள்ளனர்.

பண்டைத் தமிழ் மன்னர்கள் போர்த்துறை யில் மிகவும் சிறந்து விளங்கினர். போருக்கு ஓர் இலக்கணம் வகுத்து, போர்த்துறையில் ஒரு நாகரித்தை வகுத்து வளர்த்து வந்தனர். அவர்களுடைய போர் நெறி அறத்தினை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப் பெற்றிருந்தது.

இதனை,

**“அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர் ”[5]**

என்பதன் வழி அறிய முடிகிறது.

போர் நெறிக்கு இலக்கணம் வகுத்து, போர் நிலையினாலும் அறம் வளர்த்த பெருமை பண்டைய தமிழ் மன்னர்களுக்கு உரியது. ஒரு நாட்டின் மீது போர் தொடங்குவதற்கு முன்னர், அந்நாட்டிலுள்ள பசுக்களையும், பசு போன்ற தம்மைக் காத்துக்கொள்ளும் ஆற்றல் இல்லாதவர்களாகிய பார்ப்பார், பெண்கள், நோயுற்றவர், வயதில் மூத்தோர், குழந்தைகள், குழந்தைப் பேரில்லாத ஆண்கள் ஆகியோரையும் தன்பம் வராமல் போற்றிக் காத்து, படை வீரர்களுடன் மட்டுமே போர் புரியும் முறை மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு போர் புரிவது பேரறமாகக் கருதப்பட்டது.

**ஆவு மணியற் பார்ப்பான மக்களும்**
**பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்**
**தென்புலவாழ்நர்க் கருங்கட னிறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறாஅ**
**தீரும்............ எங்கோ வாழிய குடுமி** [6]

அவர்களெல்லோரும் அந்நாட்டை விட்டுப் பாதுகாப்பான வேறிடங்களுக்குச் சென்ற பின்பே, அந்நாட்டின் மீது போர் தொடுக்கும் முறையினைக் கொண்டிருந்தனர்.

பழந்தமிழரின் **“பழக்க வழக்கங்கள், தொழில், விளயாட்டு ”**[7] ஆகியன அனைத்திலும் அறப் பண்பு மிக்கிருந்தன. தம் தொழில் முயற்சியிலும், விளையாட்டிலும், பழக்க வழக்கங்களிலும் அறத்தொடு நின்றனர் பண்டைத் தமிழர்களும் தமிழ் மன்னர்களும்.

**போர் தொடக்கம்**

போர்த் தொடங்கும் முன் நடைபெறும் நிகழ்வுகளைச் சங்க இலக்கியம் நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது.

போரிடக் கருதுவோன் முதலில் அவையி னைக் கூட்டித் தன் கருத்தை வெளிப் படுத்துவான். அவையினரோடு முடிவெடுத்த பின், தான் போரிடும் நாட்டிற்குத் தூது மூலம் செய்தியைத் தெரிவிப்பான். அதன்பின் போரிடப் புறப்படுவதற்குரிய நல்ல நாள் பார்த்தலும், குறி பார்த்தலும் நிகழும். வெற்றி பெறுதல் வேண்டி போர் தொடங்கும் முன்பும், போர் முடிந்த பின்னும் கொற்றவையை வணங்குதல் உண்டு. சேரர், சோழர், பாண்டியர் அகிய மூவர் நாட்டிலும் இவ்வழக்கம் இருந்தது. குருதி கலந்த சோற்றினைப் படையலாக வழிபடலும் இருந்தது. இதனை "குருதி விதிர்த்த குலவுச் சோற்றைக் குன்றோ குருகெழ மரபினயிரை பரைஇ "[8] என பதிற்றுப்பத்து கூறுகிறது.

**போர்க்களம்**

போர்க்களம் பற்றி இலக்கியங்கள் பல்வேறு சொற்களைத் தொழில்களோடு தொடர்பு படுத்திக் கூறுகின்றன. தொழில் செய்யப் படும் இடத்தைக் குறிப்பதாக உள்ளது. உழவர் தொழில் செய்யும் இடம் ஏர்க்களம், கொல்லர் தொழில் செய்யும் இடம் உலைக் களம், கொலைஞர் தொழில் செய்யும் இடம் கொலைக்களம், வீரர் தொழில் செய்யும் இடம் போர்க்களம். போர்க்ளத்திலும் ஒருவரை ஒருவர் கொல்லுகின்றனர். எனினும் அது கொலைக்களம் என்று கூறப்படாது. போர்க்களம் என்றே கூறப்படும். ஏனெனில் போர்க்களம் என்பது வீரத்தின் விளைநில மாகும். ஆனால் கொலைக்களத்தில் வீரத்திற்கு இடமில்லை. இதனாலே போர்க் களத்தில் தனக்குச் சமம் அல்லாதவரோடு போர் செய்வது அறமாகாது. போரைக் குறிக்கும் சமம், "அருஞ்சமம், இருஞ்சமம், பொருசமம் "[9] என்ற சொற்கள் இதனையே விளக்குகிறது.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை, புகழாசை, விண்ணாசை ஐவகை ஆசையினாலும் தற்காப்பு நாட்டுக்காப்பு, மதக்காப்பு எனும் மூவகைக் காவினாலும், பழிதீர்ப்பு, பழம்பகை, பொறாமை என்னும் மூவகைப் பகையினாலும் பிறவரசரின்

இகழ்ச்சி பற்றியதும் திறையிறாமைப் பற்றியதும், படையெடுப்பு பற்றியதும் எனும் மூவகை தண்டனையினாலும், கடும் வீரத்தினாலும் தன் குடி மீது கோண்டதும், பிறர் குடிகள் மீது கொண்டதுமான கருவாக அருவினாலும் போர்த்தொழிலை மேற் கொண்டனர் என்னும் கருத்து காணத்தக்கது. போர் மேற்கொள்ளும் மன்னனை வீர உணர்ச்சியுடன் பாராட்டி போர் செய்யத் தூண்டும் பாடல்கள் பல புறநானூற்றில் உள்ளன. அத்துடன் இப்பாடல்கள் போரின் அழிவுகளையும், அதனால் ஏற்படும் துன்பங் களையும் சுட்டி நிற்கக்காணலாம். பண்டைய மன்னர்கள் அறம் வழுவா மன்னர்கள். அந்நெறியிலிருந்து தவறும்போது புலவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இவை போரில் மன்னர்கள் பின்பற்ற வேண்டிய நியதிகளாக உருப்பெற்றன.

**போர் அறம்**

போருக்குப் புறப்படும் மன்னன் "அதனால் ஏற்படும் அழிவுகளை முன்னரே மனதில் எண்ணிப்பார்க்க வேண்டும்"[10.] தமிழ் மக்கள் ஒத்த தினுடையோரையும், ஒத்த படையுடை யோரையும் எதிர்த்துப் போரிடுவதே போராகும் என்ற கொள்கையை உடையோர். போரிலே பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படக்கூடாது. போர் வெறிகொண்ட வீரர்கள தாம் போர்க்களத்தில் சண்டையிட வேண்டும். போர் வீரர்கள் அல்லாத மற்றவர்களுக்குப் பாதுகாப்பளித்துப் பின்னர் தான் போரைத் தொடங்க வேண்டும். இது தான் போர்த்தொழில் பற்றித் தமிழர்கள் கொண்டிருந்த அருள் நெறியாகும்.

தறுகண்மையின் சிறப்பு மற மிகுதியினால் தென்படும் மறமிக்குடையோர் அச்சுறுத்தும் நோக்குடனும் பகைவரை எச்சரிப்பர். இதனையே களப்பண்பாகக் கருதி திருவள்ளுவர்,

**எண்ணமுன் நில்லன்மின் தெவ்வீர்**
**பலரென்னை முன்னின்று கண்ணின்றவர்**[11]

**பார்ப்பார் அறவோர் பசு பத்தினிப் பெண்டிர்**
**மூத்தோர் குழவி எனுயவறைக் கைவிட்டு**[12]

தீத்திறத்தோர் பக்கமே சார்க என சிலப்பதி காரத்தில் கண்ணகி அறத்தோடு நின்றதன் வழி தமிழர்களின் போரறம் விளங்கும்.

**அடிக்குறிப்புகள்**

1. புறநானூறு- 312,
2. உ.வே.சாமிநாதையர், புறநானூறு மூலமும் உரையும்,ப.486,
3. வ.சுப.மாணிக்கம், எந்தச் சிலம்பு, பக். 52,53,
4. க.ப. அறவாணன், அற்றைநாட் காதலும் வீரமும், ப.375,
5. V.A Smith, Early History of India,p.442,
6.V.R. Rmachandra Dikshitar, War in Ancient India, p.72,
7. நச்சினார்க்கினியர்,உ.ஆ., தொல்.பொருள், புறத்திணையியல். 60,
8. மேலது,
9. மேலது,
10. பதிற்றுப்பத்து,
11. மேலது,
12. திருக்குறள்- 771
13.சிலம்பு, வஞ்சினமாலை, 63-54.

**துணை நூற்பாட்டியல்**

1.அறவாணன், க.ப, - அற்றைநாட் காதலும் வீரமும், பாரி நிலையம், சென்னை,

2.இளம்பூரணம்,(உ.ஆ.) –தொல்காப்பியம், பொருதிகாரம், முல்லை நிலையம், சென்னை.

3.இராகவையங்கார்,ரா., - தமிழ் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், சிதம்பரம்.

4.செந்துறை முத்து, - சேரர் இலக்கியச் செல்வம், வானதி பதிப்பகம், சென்னை

5.குருநாதன், இராம, - புறநானூறு புதிய பார்வை, வானதி பதிப்பகம், சென்னை.

6.கோவிந்தன், கா.- பண்டைத்தமிழரின் போர் நெறி, வள்ளுவர் பண்ணை, சென்னை.

7.துரைசாமிப்பிள்ளை, ஔவை.க. (உ.ஆ.) – புறநானூறு, கழக வெளியீடு, சென்னை.

8.Ramachandra Dikshitar, -War in Ancient India,

9.Smith Vincentadam – Early History

10.பரிமேலழகர்(உ.ஆ.)–திருக்குறள்,பூம்புகார் பதிப்பகம், சென்னை

11.வேங்கடசாமி நாட்டார், ந.மு.(உ.ஆ.) – சிலப்பதிகாரம், கழக வெளியீடு, சென்னை.